**செய்தி வெளியீடு எண்: 607** **நாள்: 01.09.2018**

# செய்தி வெளியீடு

## பல்நோக்கு ஆதார வள மையம்

சென்னை – 10, கெல்லீஸ், எண்.300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சிறுமியருக்கான அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் பல்நோக்கு ஆதார வள மையம் நிறுவியுள்ளது. பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் சிறார்கள் மற்றும் தவறிழைத்ததாக கருதப்படும் குழந்தைகளுக்கு தோழமையான சூழலில் அனைத்து பங்களிப்பாளர்களும் ஒரே இடத்தில் இணைந்து குழந்தையின் கண்ணியம் மற்றும் தனியுரிமையை தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளவும் மற்றும் விசாரணையின் போதே பல்வேறு பங்குதாரர்களின் ஆலோசனையின் மூலம் ஒரே நேரத்தில் ஒரு பயனுள்ள செயல் திட்டம் தயார் செய்யவும் இம்மையத்தின் நோக்கமாகும்.

இம்மையத்தில் ஓர் தனியறையில் விசாரணைக்காக நியமிக்கப்பட்ட நபர் குழந்தையிடம் விசாரணை மேற்கொள்ளும் போது, குழந்தை நல குழு, இளைஞர் நீதி குழுமம், நன்னடத்தை அலுவலர், காவல்துறை அலுவலர், அரசு வழக்கறிஞர், மருத்துவ அலுவலர் மற்றும் இதர பங்களிப்பாளர்கள் அதே வளாகத்தில் அமைந்துள்ள மற்றொரு அறையில் ஒளி ஒலி காணொளி மூலம் விசாரணையினை பார்க்கவும், கேட்கவும் முடியும்.

குழந்தையின் பாலினத்தை அடைப்படையாக கொண்டு ஆண் அல்லது பெண் மொழி பெயர்ப்பாளர் நியமிக்கப்படுவர். பங்களிப்பாளர்கள் அல்லது சேவை வழங்குபவர்களுக்கு குழந்தையிடம் கூடுதல் தகவல் தேவைப்படும் போது நேரடியாக குழந்தையிடம் கேட்காமல், குழந்தையிடம் விசாரணை மேற்கொள்ளும் விசாரணை அலுவலரிடம் கேட்க வேண்டும்.

சமூகப்பாதுகாப்புத்துறையும் Save the Children என்ற தன்னார்வ தொண்டு நிறுவனமும் இணைந்து பல்நோக்கு ஆதார மையத்தினை ரூ.11.50 லட்சத்தில் நிறுவியுள்ளது. 01.09.2018 அன்று இம்மையத்தினை மாண்புமிகு உச்ச நீதிமன்ற நீதியரசர் திருமதி.இந்திரா பானர்ஜி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேலும் மாண்புமிகு உயர் நீதிமன்ற தலைமை நீதியரசர் திருமதி.விஜயா கமலேஷ் தஹில்ரமணி அவர்களால் இம்மையத்திற்கான கூடுதல் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

மேற்கண்ட விழாவிற்கு இளைஞர் நீதி குழுவின் மாண்புமிகு நீதியரசர்கள், மாநில சட்ட உதவி சேவைகள் குழுவின் மாண்புமிகு நீதியரசர்கள், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் அரசு முதன்மை செயலர், சமூகப்பாதுகாப்புத்துறை ஆணையர், தமிழ்நாடு மாநில நீதித்துறை கழகம், மாநில மனித உரிமைகள் ஆணையம், காவல்துறை அலுவலர்கள், கல்வித்துறை அலுவலர்கள், மருத்துவதுறை அலுவலர்கள் மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், இளைஞர் நீதி குழும தலைவர் மற்றும் உறுப்பினர்கள், குழந்தைகள் நலக் குழு உறுப்பினர்கள் மற்றும் ஏனைய துறைச் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**